# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூ] யாழ்ப்பாணம்:- கர வருடம் மாசி மீ உச உ வெள்ளிக்கிழமை (7 மார்ஜ் 1952) [இல - க0]


## கால் நடைகளைக் காப்பாற்ற விட்டால் கடும்பஞ்சம் நேரிடும்

### சீவகாருண்ணியம் சிறிது மில்லாது போய்விட்டதா?

( நீர்வேலி திரு. சி. க. வேலாயுதபிள்ளை எழுதியது )

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய அதிகாரிக்கு உணவுக்காகப் பசுமாட்டைக்கொடுக்கவேண்டிய துன்பநிலை வந்தபோது அந்த மா பாதகச் செயலுக்கு அஞ்சி நாட்டை விட்டு வெளி யேறிய திருநெல்வேலி ஸ்ரீ ஞானப்பிரகாசர் சந்ததியில் தோன்றியநம்மவர் இன்றுகேவலம்! அற்ப பண ஆசை பிடித்து நாட்டில் உள்ள பசுமாடுகள் ஆடுகளை வெளியிடங்களுக்கு இறைச்சிக்காக அனுப்புவதற்கு விற்பனவு செய்யும் கோரக் கொடுமைகளை — பாதகச் செயல்களைப் புரிவது வடமாகாணத்தில் உள்ள எல்லாமக்களுக்கும் அவமானமாகும். சோம்பேறிகளாகிய ஒரு சிலர் செய்யும் இந்த வியாபாரம் வட மாகாணத்தின் செல்வநிலையை அதிகம் பாதிக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் இந்த அயோக்கியத்தனமான வியாபார முறையினால் கிராமத்தில் உள்ள ஏழை மக்களுடைய — கமக்காரர்களுடைய பசு, எருது, ஆடு முதலிய கால் நடைகள் களவு போகின்றன. மானிட வாழ்க்கைத் தன்மையை உணர்ந்த மக்கள் இவற்றைச்சகிக்கமாட்டார்கள். இந்த விதமான அக்கிரமத்தை உடனேயே தடைசெய்வதற்கான முயற்சிகளை எடுப்பது இந்த நாட்டில் உள்ள மக்களது கடமையாகும்.

"கிராமங்களில் சில தரகர்கள் இருந்து இராக்காலங்களில் ஒரு கிராமத்திலிருந்து மற்றோர் கிராமத்துக்கு கால் நடைகளைக் களவாக அப்புறப்படுத்துகின்றார்கள். அதன்பின் அகப்பட்ட விலைக்கு கால் நடைகள் விற்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட தொகையான கால் நடைகள் சேர்ந்தபின் புகைவண்டிகள் மூலமாகவும் ஏனைய வாகனங்கள் மூலமாகவும் வெளியிடங்களுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு இறைச்சியின்பொருட்டு கால்நடைகள் படுகொலைகள் செய்யப்படுகின்றன. இதனுல் வடமாகாணப்பகுதிகளில் உள்ள கமக்காரர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சென்ற இரண்டுவருட காலமாக இந்தவிதமான அட்டூளியங்கள் நடைபெற்று வருகின்றன. கால் நடைகள் குறைந்து வருவதினுல் ஏற்படும் கஷ்டங்கள் அளவிலாதன, விவம் பண்படுத்தமுடியாது. பசுக்கள் இல்லாமல் போகின்றன. பால் உணவு குறைந்துவிடுகின்றது. பால் உணவின் அக விலை ஏறுகிறது. கமக்காரர்களுக்கு உபயோகமான கால்நடைகளின் விலையும் அதிகரிக்கின்றது. பசுக்களுக்கும் விலை அதிகரிக்கின்றது. இவற்றால் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள்-கமக்காரர்கள்"

"பால் உணவு, கால்நடைகள், பசுக்கள், அகவிலை ஏறுவதால் வாழ்க்கைப் புள்ளியும் உயருகின்றது. வாழ்க்கைப்புள்ளி உயருவதால் உத்தியோகஸ்தர்களுக்கும் வாழ்க்கைச் செலவுக்குப் பணம் கூடுதலாகக் கிடைக்கின்றது. அவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார்கள். சாதாரண ஏழை மக்கள் பணவசதி யின்மையால் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடி

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

உ

### மலமறுத்து வான்கருணை தந்தான் ... ...

திருச்சிற்றம்பலம்

பாங்கினொடு பரிசொன்று மறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர வுலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை யம்பலத்தே கண்டேனே.

திருச்சிற்றம்பலம்

## ஒற்றுமை உணர்ச்சியை - - - - உண்டுபண்ணுவது யார் கடமை?

## பிரதிநிதிகளே! - - கட்சி விவாதத்தை ஒழியுங்கள்!!

### ஆக்கவேலைக்கு அடிகோலுங்கள்!!!

இன்ப சமாசம் ஏற்பட முடியாதா என்ற வினவுடன் தொடங்கி, மன்னனெவ்வழி மன்னுயிரவ்வழி என்ற எடுத்துக்காட்டால், தமிழ் மக்களிடையே அறநெறி என்னும் பயிரை நாட்டி "அறத்தான வருவதே யின்பம்" என்றபடி அதனை விளைவாகிய இன்பம் எம் சமூகத்திலே நிலவுவதற்கு, முன்னவர் அல்லது தலைவர்கள் ஆவார் முன்மாதிரியாய் வாழ்ந்து காட்டுவாராயின் நாட்டு மக்கள் அன்னவரைப் பின் தொடர்ந்து இன்புற்று வாழுதல் சாலுமெனப்பது 19-2-52ல் வெளிவந்த இந்துசாதன இதழிற் குறிப்பிட்டுக் காட்டினேம்.

முன்னவர் அல்லது தலைவர்கள் ஆவார் மந்திரிகள், பாராளுமன்றம் முதலிய பல்சபைப் பிரதிநிதிகள், ஆங்கில தமிழ் வைத்தியர்கள், ஆசிரியர்கள், நியாயவாதிகள், வழக்கறிஞர்கள் முதலிய யாவரும் என்று கொள்க. இன்னும் பலருளர் என்பது பெறப்படவே முதலிய என்று மேலும் மொழிந்தோம். ஈண்டு இவ்விதழில் எடுத்துக்கொண்ட பொருளுக்கு எங்கள் மந்திரிகளும் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் முன்மாதிரி காட்டவேண்டியவர்களா யிருக்கின்றனர்,

#### ஒற்றுமை இன்பத்துக்கு ஏது!

பலசாதியினர் பல சமயத்தினர் வாழும் எம் ஈழநாட்டிலே ஒற்றுமையான வாழ்க்கை உண்டாகும் பொருட்டுச் சமயச் சார்பில்லாது உலகியல் அறநெறியைக் கடைப்பிடித்துப் பொதுசன ஆட்சி புரிகின்றோம் என்று ... இலங்கை ... சாங்கக் கட்சியார் ... அத்திவாரத்தை ஆட்சியால் ... மக்களிடையே ஒற்றுமை உண்டாயிருக்கா? பாரதபினுமொரு பிரிவிலுள்ள மக்களிடையே அல்லது ஒரு சிறுகிராமத்திலுள்ள மக்களிடையேயாயினும் ஒற்றுமையான அன்புநிலை நிலவுகின்றதா? ஒரு சிறிதுமே யில்லை. ஒற்றுமையின்றி இன்ப வாழ்க்கை உண்டாகலாமா? "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே" என்னும் பாரதியார் செய்யுட் சொற்றொடர் இன்ப வாழ்க்கைக்கு ஒற்றுமை ஏதுவாயிருக்கென்பதைக் குறித்தல் காண்க.

#### பாராளுமன்றப் பிரதிநிதிகளே ஒற்றுமை உண்டாக்க வேண்டும்!

இந்த ஒற்றுமையை யார் உண்டாக்குவது, எப்படி உண்டாக்குவது? இக்கால மக்களுடைய அறிவு நிலையை, ஒழுக்கநிலையை உற்று நோக்கும் பொழுது எந்தச் சமயாசாரியராலும் எந்தச் சமூகத் தொண்டராலும் எவ்வித ஒற்றுமையையும் உண்டாக்கி நிலை நாட்ட முடியாது என்பது புலப்படும். ஒருசிலர் தன் முயற்சியால் சில துறைகளில் ஒருகாலம் ஒற்றுமையிருக்கக் கூடும். ஆனுல் பாராளுமன்றம், பட்டினசங்கம், நகர சங்கம், கிராமச் சங்கம் முதலிய சங்கத் தேர்தல்கள் வரும் பொழுது மக்களிடையே உண்டாயிருந்த எந்த ஒற்றுமையும் அழிந் தொழிந்து போவது நிச்சயம். சமூகங்களிடையேயுள்ள ஒற்றுமை மாத்திரமல்ல,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

புகையற் பொன்மொழி

### நாவலர் விரும்பிய பயன்

"சென்ன பட்டணஞ் சேர்ந்த பல நூல்களையும் உரைகளையுந் திருத்தியும் புதிய நூல்கள் பல செய்தும் உலகத்தாருக்குப் பயன்படும் பொருட்டு அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தல் ஒருபயன். பற்றற்ற மெய்ஞ்ஞானிகளுக்கும் வேண்டற்பாலனவேயாகிய அன்னவஸ்திரங்களுக்கு முட்டற அப் புத்தகங்களால் வரும் ஊதியங் கொண்டு வாழ்தல் ஒரு பயன். எஞ்சிய ஊதியம் நாம் எடுத்த தருமங்களுக்காயினுஞ் சிவாலயங்களுக்காயினும் பயன்படல் ஒரு பயன், ஆவை பலமுற்றிய பின்னராயினும் இடையிலாயினுந் தேவாரம்பெற்ற சிவஸ்தலம் யாதேனும் ஒன்றில் இறத்தல் ஒரு பயன் ஆகிய இப்பயன்களெல்லாம் கைக்கெய்தும்".

— ந. க. ஆறுமுகநாவலர்

"ந. த. கைலாசபிள்ளை தனக்குப் பிற்காலம், மேற்படி தருமங்களை ஒழுங்காக நடத்தி வரும்பொருட்டு, ஆறுமுகநாவலரவர்களுடைய மாணுக்கர் பரம்பரையிற் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்த ஒருவரை அல்லது பலரைத் தனது இஷ்டப்படி தெரிந்து நியமித்துக் கொள்ளலாம்". —ந. க. சதாசிவப்பிள்ளை

"ஆறுமுகநாவலரவர்கள் விவாகஞ் செய்யாம லிருந்து தமது நைட்டிகப் பிரமச்சரிய விரதத்தை உலகத்தார் பலரும் அறியத்தக்கதாக எட்டுணையேனும் பழுதுபடாமல் நிறைவேற்றி முடித்தார். அன்றியுந் தம்முடைய சம்பாத்தியங்களெல்லாவற்றையுந் தமது வித்தியாசாலைக்கும் தாம் மேற்கொண்ட பிற தருமங்களுக்கும் செலவழித்ததே யல்லாமல் தமது சுற்றத்தாருக்குக் கொடுத்ததில்லை. நைட்டிகப் பிரமச்சாரியாய்ச் சுற்றக் கலப்பில்லா திருந்தநினுலே ஆசௌசங்களை மாத்திரங் காத்திலர்.

சிலர் புண்ணியத்தை விரும்பியும் சிலர் தங்கள் உரிமைக்காரரை வஞ்சிக்க விரும்பியும் "இன்ன ஆதனம் எனக்குப்பின் இன்ன தருமத்துக்கு" என்று ஒவ்வோர் தருமத்தைக் குறித்து எழுதுகிறார்கள். இவர்கள் இந்தத் தருமங்கள் நடக்கிறதைத் தாங்கள் பார்க்கக்கூடாது என்று எண்ணிப்போலும் தாங்களுக்குப் பின்" என்று எழுதுவது. இவர்களுக்குத் தாங்கள் செய்யுந் தருமங்களைத் தாங்கள் பார்த்து மகிழும் நல்ல விதி இல்லை. நாமெல்லாஞ் செய்வோம்."

— த. கைலாசபிள்ளை

அரசியல் அலை

## கடிதப் போக்குவரத்துத் துரிதம் ............!

### 'மாதம் போம் காதவழி' வேகம்!

### புகையிரதப் போக்கு வகை தெரியாத விதம்

துரித மயமான இவ்வுலகில், வேகமே விதி என்கிற இக்காலத்தில், கடிதப் போக்கு வரத்துக் கண்மூடி விழிக்க முன் நடைபெறவேண்டும் என்று எவர்களும் கருதுவார்கள். ஆனுல் உண்மையிற் (கடிதப் போக்குவரத்துக் குதிரை) காத வழி போக மாதம்பல வேண்டுகின்றதே!

யாழ்ப்பாணப் பட்டினத்தில் உள்ளவர்கள நிலைமைதான் மிக மோசமானது. உள் நாட்டில் உள்ள உபதபாற் கந்தோரிற் கடிதங்கள் ஒருமணித்தியாலத்துக்குட் கொடுபட்டுவிடுகின்றன. ஆனுல் வட இலங்கைத் தலைநகரிலுள்ள பெரிய தபால் நிலையத்திலிருந்து வண்ணார்பண்ணையி லுள்ளவர்களுக்குக் கடிதம் வந்து சேருவது ... கடமாகவிருக்கிறது. கடிதங்கள் வந்து சேரும் கால அட்டவணை ஒன்றை ஒரு நாசியாலய எழுத்தாளர் குறித்து வைத்து "அரசியல் அலை"யில் அடிபட அனுப்பியுள்ளார்.

நிலைமை மிகமோசமாயிருக்கிறது. கொழும்புமாநகரிலிருந்து வரும் புகையிரதம் ஒரு மணித்தியாலம் பிந்திவந்தால யாழ்ப்பாணப்பட்டின வாசிகள்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே"

# இந்துசாதனம்

யாழ். கரஹ மாசி ௴
௨௪ ௨ வெள்ளிக்கிழமை

## பரதநாட்டில் - - மக்கள் தீர்ப்பு!

அகில உலகினும் எங்கணும் எக்காலத்தும் இல்லாத பிரமாண்டமான குடிமானவர்களின் பிரதிநிதிகள் தெரிவு ஒருவாறு முடிவடைந்து விட்டது. தேசியப் புத்துணர்ச்சியின் சின்னமாகப் பன்னெடுங்காலம் கீர்த்தி வாய்ந்த இந்திய தேசிய மகாசபை 498 அங்கத்தவர்கள் கொண்ட மக்கள் சபையில் 363 இடங்களைக் கைப்பற்றி மாபெரும் வெற்றியை அடைந்திருப்பது இந்திய நாட்டில் பொதுநலத் தொண்டை உயிரென மதித்து உழைத்து அப்பெரும் பணியில் தம் ஆவி நீத்த மகான் காந்தியின மகத்தான கொள்கைகள் மறைந்துவிடவில்லை என்றும் காந்தியக் கொள்கைக்கு நேர் விரோதமான பலாத்காரக் கட்சியினரின் தீவிரமுயற்சிகள் பயனடையவில்லை என்றுங் காட்டுகின்றது.

இன்றைய அரசியல் உலகில் உண்மையும் உள்ளத் தொழுக்கமும் ஒன்றுசேர்ந்த உருவமாக விளங்கும் உத்தமர் நேரு அவர்கள் மகாத்மா காந்தியின் சீரிய தேசப் பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றார் என்ற பொது சனங்களின் நம்பிக்கையை மீண்டும் பெருமிதமாகப் பெற்றிருக்கின்றார். இந்திய பிரதமர் நேருவைப் போலப் பொதுவுடைமைக் கொள்கையையோ அன்றி சமசமுகக் கொள்கையையோ ஆதரிக்கும் அரசியல் நிபுணர்கள் வேறெவருமில்லை என்று நாம் மாத்திரமன்று உலக அரசியல் வல்லுநர்கள் அனைவருமே கூறுகின்றனர். எனினும், இப்பெருந் தலைவரையும் அவரின் கட்சியையும் எதிர்த்து அக்கட்சியிற் பல்லாண்டுகளாகப் பெரும் பணியாற்றிய பேரறிஞர்கள் பிரிந்து பலவேறு கட்சிகளை ஆரம்பித்துப் பொதுத் தேர்தலிற் கலந்து, படுதோல்வியடைந்தும் மறைமுகமாக அதிதீவிர வாதிகளின் நயவஞ்சக சூழ்ச்சிகளில் அறியாது அகப்பட்டுக்கொண்டவர்கள் போலத் தேசிய மகாசபைக்கு எதிர்ப் போராட்டஞ் செய்கின்றமை மிகவும் இகழக் கூடியதாகின்றது. யார் தலைவர் என்ற ஆணவத்தடிப்பினால் கொண்ட நன்னோக்கங்களையும் பன்னுளுழைத்த நன் முயற்சிகளையும் தூற்றுவாய்த் தூற்றிவிட்டு, தலைமைப் பித்துக்கொண்டு திரிவது ஒருபுறம்; எங்கே கட்சிகளுக்கிடையே அபிப்பிராய பேதம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சகுனி மாமாக்களின் வஞ்சகவலையிற் சிக்குப்படுவது இன்னொருபுறம்.

பரதநாட்டிற் பசிப்பிணி தாங்கமுடியாதிருந்தும் தேசிய மகாசபை அரசாங்கம் அதைத் தீர்க்கவில்லையே என்றால் மகா யுத்தம் காரணமாக வந்த ஓர் விபரீத நிலைமை உடனேயே மாற்றியமைக்க எந்த அரசாங்கத்தாலும் முடியுமா? அன்றிச் சென்னையில் மதுவிலக்கை ஒழித்து மக்களை மனிதர்களாக்கிய அரசாங்கம் பொதுசன நன்மை செய்யவில்லை என்பது முறையா? மொழிகள் பல வுள்ள பரதநாட்டில் ஒவ்வொரு மொழி வழங்கும் இடத்தையும் ஒவ்வொரு தனிநாடாக்க எழுந்த விண்ணப்பத்தை பிரதமர் நேரு உடனேயே ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவர் போன்ற அரசியல் ஞானி எதையும் சீராயாராயாது செய்து முடிக்க முன்வருவாரா? அவர்மீது குற்றஞ் சுமத்தலாமா?

பொதுவாகத் தேசிய மகாசபையினரும் மாகாண அரசாங்கங்களும் அறிந்தோ அறியாமலோ இழைத்த பிழைகளை எல்லாம பிரதமர் நேரு ஒப்புக்கொண்டது மன்றி அவற்றையெல்லாம் ஒழித்துவிடப் பகிரங்கமாக முயற்சிக்கின்றார் என்பதைப் புரட்சிக்காரர் ஞாபகத்தில்வைப்பதிலும் பொதுசனங்கள் மனத்தில் ஊன்றிவிடுவது நன்று. பசுத் தோல் போர்த்தப் புலிக்குணம் காட்டும் அரசியற்கட்சியினர்பாரதநாட்டில் மாத்திரமன்று, எங்கள் நாட்டிலும் ஆளோடு ஆளாகக் கலந்திருக்கின்றனர்.

பொது சனத் தொண்டு என்றால், ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கமைந்ததாக இருக்கவேண்டும். உயரிய கொள்கை யுடைத்தாக வேண்டும். உயிர் போகவரினும் உண்மை தவறுமுறையாதல் வேண்டும், எவற்றிலும் மேலாக அன்பை அடிப்படையாக உள்ளதாக வேண்டும். பயமுறுத்திப் பலாத்காரஞ்செய்து, புகையிரதப் பாதையையழித்தும், பாலங்களையுடைத்தும் ஒன்றுமறியாதவர்களை எமனுக்கிரையாக்கி, தங்கள் கடமைகளைப் புரியாது உரிமைகள் என்று தாம் எண்ணுகின்ற எல்லாவற்றையும் 'தாருங்கள்!' என்று துரியோதன, அசுர, இராவண இரணிய அம்சங்கொண்டு வாதாடும் அரசியற் கட்சியினரை எதிர்க்கும் எக்கட்சியும் வெற்றி பெறுவது மக்களுக்கு நன்மை பயக்குமென்ற முறையிற் பாரதநாட்டுத் தேசிய மகாசபை வெற்றியையும் பிரதமர் ஸ்ரீ நேரு அவர்களின் பெருந்திறனையும் பாராட்டுகின்றோம்.

தொடர்கதை

# இன்பத்தின் நிலை இதுதானா?

'இறை ஒளி'

12

பகவதியும் பங்சஜமும் மற்றை நாட் கல்லூரிக்குச் சென்றனர். பங்கஜத்திற்கு முன் பகவதி கல்லூரியை அடைந்து ஆசிரியரைச் சந்தித்தாள். ஆசிரியர் பகவதியைக் கண்டதும் ஆலோசிக்கத் தொடங்கினர். அகற்றினபேய் பின் தொடர்ந்தாற் போன்று திரும்பவுமா வந்துவிட்டாள் என் மனத்தை உடைக்க, என்றெல்லாம் தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு "வா, பகவதி! என்ன இன்று கல்லூரியில், நேற்று நான கொடுத்த அறிவித்தலைக் கவனிக்கவில்லைப் போலும். இருக்கட்டும், ஏதாவது பாடங் கேட்க வந்தாயா" என்று ஆசிரியர் கேட்க, புன்முறுவல் பூத்த முகத்துடன் பகவதி சொல்லுவாள், "நீங்கள் நேற்றுத் தந்த அறிவித்தலை நான் அறிவேன். இருந்தும் உங்களைச் சந்திக்கவேண்டுமென்றே வந்தேன். நேற்று நாடக ஒழுங்கு பார்க்கும் வேளை நான் விளையாட்டுத்தனமாகச் சில வற்றைக் கூறிவிட்டேன். அக்குனம் செய்துவிட்டு என்மனம் நிம்மதி படைய வில்லை. உங்களை மறக்க முடியவில்லை. நாடகம் நடைபெற வேண்டியதே என் விருப்பம். ஆனால் நானும கதாநாயகியாக நடிக்க வேண்டுமென்று விரும்புகிறேன் ... .... என்று சொல்லவும் ஆசிரியர் உயிர்த்தெழுந்தவர்போல் முகமலர்ச்சியோடு பகவதியை அழைத்துப் பெண்ணே, நீ ஏதோ மனதில் வைத்துக் கொண்டே இந்த மாதிரி நடக்கின்றாய். நாடகத்திற்கு நீ பொருத்தமற்றவள் என்று நான் கருதியதாக நினைத்து விட்டாய், அப்படி எண்ணாதே. பங்சஜம்தோற்றத்தாலும சாரீர இனிமையாலும் கதாநாயகியாகநடிக்கத் தகுந்தவள் என்றே தெரிந்தெடுத்தேன். நீயும் அவ்வாறு நடிப்பதாகில் அதில் என்ன கெட்டுப்போகிறது. நன்றாக நடிக்கலாம் முன் கதாநாயகியாகப் பங்கஜமும் பின் நடிப்பு நீயும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவும் அமையம் பங்கஜமும் சங்கரும் வந்து சேர்ந்தனர்! வழமைபோலக் கல்லூரியிற் பிள்ளைகள் இல்லாமை கண்ட சங்கர் காரணத்தை வினவுதலும் ஆசிரியர் விடுமுறை விட்டதாயும் ஆனால் விடுமுறையைப் பின்னர் தவிர்த்துவிட்டதாயும் அந்த அறிவித்தல் நிகழியமையால் இவர்கள் இருவருமே வந்தார்கள் என்றும் ஒருவிதமாக நிலைமையைச் சமாளித்துவிட்டார். சங்கார் மோட்டார் இரதத்திலே திரும்பினர்.

### ஆறின புண்ணில் ஆர்ப்பு!

பஙசஜ வசவள ஒன்றும் பேசாதிருந்தாள். பகவதி பங்கஜத்தைப் பார்த்து ஆசிரியர் இருவரையும் கதாநாயகியாக நடிக்க உத்தரவு கொடுத்துவிட்டதாகக் கூறி எப்பாகத்தைப் பங்கஜம் விரும்புவதாக வினவினள். பொதுவாக நாணமிக்கவள ஆகையால் பங்கஜம் பகவதியையே தெரிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பினள்! தருணம் வாய்த்ததெனப் பகவதியும் தான் முதற் பாகத்தை நடிக்க விரும்புவதாகக் கூறினள. இதற்கிடையில் ஆசிரியர் தன் எண்ணம் முழுவதும் வாய்க்காது போவதை உத்தேசித்துப் பகவதியைப் பிற்பாகத்தையே எடுக்கும்படி வேண்டினர். இவ்வளவிற் பகவதி சிறிச் சினந்தாள். கோபக் குறிப்புடன் சொல்லுவாள ...................... (வளரும.)

# சமரசம் வகுக்கும் தெய்வ மதம்

## பொய்வந்துழலா நெறிகாட்டும் புனித சைவம்

நம் சைவசமயம் மிக மிகத் தொன்மை வாய்ந்தது. உலகப் பெருஞ் சமயங்களாகக் கருதப்படும் கிறித்தவம், இஸ்லாம், பௌத்தம் முதலாயின தோன்றற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் சைவசமயம் மிகச் சிறப்பாக உலகெங்கும் பரவியிருந்தது. எகிப்து, மெசொபொடேமியா, அரேபியா, கிரீஸ், இத்தாலி, இங்கிலாந்து, தென் அமெரிக்கா முதலிய பல இடங்களிலும் இன்றைக்கும் சிவலிங்கங்கள் பல காணப்படுகின்றன. இலங்கையில் திருக்கேதீச்சரம் உள்ள மாந்தை நகரில் சிவலிங்கங்களும், சங்காபிடேகத்திற்குரிய 1008 சங்குகளும் அகழ்ந்தெடுக்கப் பெற்ற செய்தி 'சித்தாந்தம்' நா ஆடி இதழில் வெளியாகியுள்ளது. பாரத நாட்டின் புறமபே பல சிவ சின்னங்கள் காணப்படுதல் போன்று, பாரத நாட்டிலும், சேதுமுதல் இமயம் வரையாண்டும் காணப்படுகின்றன. சிவலிங்கம், கூத்தப் பெருமான், சக்தி முதலிய திருவுருவங்கள் சிந்துக்கரையில் அகழ்ந்தெடுக்கப் பற்றதை யாவரும் அறிவர். இமயம் முதற் கன்னிமுனைவரை சிவாலயங்களும சைவநெறியும் தழைத்தோங்கி யுள்ளன. இவற்றை மனத்துட் கொண்டு நோக்கின்,

"ஞான நின்புகழேமிக
வேண்டுந்தென்
ஆலவாயி லுறையுமெம்
மாதியே"

"வேலுந்திரு நீற்று
நெறித்துறை நீடுவாழ
உலகெங்கு நாமிய
சைவம டோந்துமன்ன"

என்ற சேக்கிழார் பெருமான் அருண்மொழியும் முற்றிலும் உண்மை மொழிகளே யென்பது நன்கு புலனாகும்.

### சைவத்தின் மாண்பு

சிவபிரான ஆணையால ஆன்மாக்கள் வினைவழியாகப் பிறந்திறந்துழலுங்காலத்து, பௌத்தம்முதலிய புறச் சமயங்களிலின்று, அவ்வச் சமய நூல்களில் விதித்த வண்ணம ஒழுகுவரேனும, அவரவர்க்கு அவரவர் வணங்கும் உருவினராய்ச் சிவனே அருள் செய்கின்றார். இதனை,

அறிவி னுல்மிக்க அறவகைச்
சமயம்
அவ்வவர்க்கங்கே ஆருள்
புரிந்து
எறியும் மாகடல் இலங்கையர்
கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த்
திட்டுக்
குறிகொள்பாடலின் இன்னிசை
கேட்டுக்
கோலவாளொடு நாளது
கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி
யடைந்தேன
செழும்பொ ழில்திருப் புன்கூ
ருளானே"

என்னும் ஆளுடைய நம்பிகள தேவாரத்தாலும்,

'யாதொரு தெய்வங்
கொண்டீர்
அத்தெய் மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம்
வருவர் மற்றதெய் வங்கள்
நிகழ் வேப்பமிசை இறக்கும
பிறக்குமமேல்வினையுஞ்செய்யும்
ஆதலான இவையி லாதான்
அறிந்தருள் செய்வனன்றே"

எனவுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தாலும அறியலாகும.

புறச்சமயங்களில் நின்று இயற்றிய நல்வினைகளால் பின்வைநுக நரகம் புகுந்தோர் வேதத்திலும் அதன வழி நூல்களிலும் விதித்த பசு புண்ணியங்களைச் செய்து சுவர்க்கஞ் சென்று போகம நுகர்ந்து மீண்டும பூமியிற் பிறப்பர்; முன செய்த அந் நல்வினை மிகுதியால் சைவாகமத்தால் உணர்த்தப்பெறுஞ் சைவத்திற் புகந்து, சரியை, கிரியை, யோக நெறி நின்று, அவற்றின் பயனகளாகிய சாலோக, சாமீப, சாரூப பதங்களைப் பெறுவர்; அவர்களுள் போகத்தில் பற்று இலலாதவர் மீண்டும் பூமியில் வாராது சிவனருளால் பாமுத்தி யடைவர்: பற்று உடையவர் மீண்டும் பூமியிற் பிறந்து சிவஞானத்தைப் பொருந்திப் பாமுத்தியாகிய சிவசாயுச்சியத்தைப் பெறுவர். இவ்வுண்மையைச் சைவசமய சாத்திரமாகிய சிவஞான சித்தியார் நன்கு அறிவுறுத்துகிறது. அச்செய்யுள் வருமாறு;-

'தானமயா கமதீர்த்தம்
ஆச்சிரமம் தவங்கள்
சாந்திரா தங்கள்ம
யோகங்கள் சரித்தோர்
ஈனமிலாச் சுவர்க்கமபெற்
றிமைப்பளவின மீளவர்
ஈசனியா கக்கிரியா
சரியையினில நின்றோர்
ஊனமிலா முத்திபதம்
பெற்றுலக மெல்லாம்
ஒடுக்குமபோ தரனமுன்னிலா
தொழியின் உற்பவித்து
ஞானநெறி அடைந்தடைவா
சிவனை யநந்த
காதனே முன்னிற்கில
நணுகுவர் நமலனை"

தொடர்ச்சி 8-ம் பக்கம்

## சமரசம் வருக்கும் தெய்வமதம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

இவற்றால் சைவ சித்தாந்தம் தன்றிப் பாமுதஞ் சித்தியாத என்பதும், அப்பாமுத்திக்குச் சாதனம் சிவஞானமே என்பதும், அச் சிவஞானத்தைப் பயப்பன சரியை முதலிய மூன்றுமே என்பதும் விசதமாக விளங்கும்.

ஏனைய சமயங்கள் ஆன்ம தத்துவம் 21-உள் அடங்கி அத்தத்துவப் பொருளையே பரம்பொருள் எனக் கொள்ளுதலால் அவை இதனுள் வியாப்பியமாக, இது வியாபகமாய் அவற்றைக் கடந்து நிற்றலின் இதுவே 'அதீத சமயம்' என்றும் இந்நெறி நின்ற பெறும் பொருளே 'பழம் பொருள்' என்றும் கூறப்படும். இது பற்றியே வெரும் போற்றப் தாயுமான சுவாமிகளும்,

"சைவ சமய மேசமயஞ்
சமயாதீதப்பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே"

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

சமரச நிலைமை வற்புறுத்திக் கூறுதல் நம சமயத்தின் தனிப் பெருமாண்பாம். சமயகுரவர்கள் அருளிச் செய்தனவாக தமிழ் வேதங்களை ஓதுவார்க்குச் சமரசவுணமை நன்கு புலனாகும்.

"விரிவிலா அறிவி னார்கள்
வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்"
"....ஆறுசமயத் தவரவரைத்,
தேறத் தேற்றனை"

என்னும் அப்பர் அருண்மொழிகளை நோக்குக.

## இந்து ஆலய பரிபாலனச் சட்ட திட்டம்

### உபசபைத்திருத்தங்களுடன் வெளியாய்விட்டது

பாராளுமன்ற மேற்சபையின் ஒரு குழுவினரால் பரிசீலனை செய்யப்பெற்ற இந்த ஆலய பரிபாலனச் சட்டதிட்டத்தில் சில திருத்தங்கள் உண்டாக்கப்பெற்றிருக்கின்றன. கீழே காணப்படும் இரண்டும் அவற்றுள் முக்கியமானவை.

1. காரியாதிகாரி மந்திரியின் ஆலோசனைச்சபையினரின் அனுமதியுடனேயே இச் சட்ட திட்டத்திலுள்ள தமது கடமைகளையும் தத்துவத்தையும் ஆற்ற வேண்டுமென்ற 5-ம் சட்டம் நிராகரிக்கப்பெற்றது.

2. காரியாதிகாரிக்கு ஆலோசனைச் சபையாக அமைய வேண்டிய தர்மகர்த்தாக்கள் சபையக்கத்தவர் ஒன்பதின்மர்பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஒருவராக அங்குள்ள ஆலயங்களின் உபயகாரராலே தெரிவு செய்யப்பட வேண்டுமென்பது இன்னொரு திருத்தம்.

முதலும் முடிவுமின்றி அநாதியாக உள்ள உயிர்க்கு நல்வினை தீவினைகளால் உடல், கருவிகள், உலகு இருப்பு, இன்ப துன்ப நுகர்ச்சி ஆகியவைகள் வந்தடைகின்றன. உயிர்கள் இவ்வுலகில் வாழும் வாழ்க்கைகொண்டே பாச நீக்கமும் பாசப்பற்று நீக்கமும் திருவருட்பேறும் பெற்றுப் பேரின்ப நிலையில் இருத்தல் இயலும் என்றுகணித்துக் கூறும் இத்திருநெறி ஒன்றே நமக்கு நிச்சயமாய் ஆறுதல் அளிக்கிற்றாகும்.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

### "காயத்திரி ஜெபம்"

யாழ்ப்பாணம் கொக்குவில் பஞ்சாங்க கணிதர் பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதய்யரவர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

ஐய! எல்லாப் பஞ்சாங்கங்களிலும் 'நந்தன வருஷம் ஆடி மீ 22 உ காயத்திரி ஜெபம் என்று குறித்திருப்பதை நீங்கள் இதுவரையிலும் பார்த்திருக்கலாம். உங்கள் பஞ்சாங்கத்தில் மட்டும் காயத்திரி-ஜெபம் குறியாமல் தவிர்த்துவிட்டீர்கள். அது ஒப்பு உயர்வுஅற்ற ஓர் பெருங்கருமமல்லவா? நந்தன வருஷம் காயத்திரி ஜெபம் கொண்டாட வேண்டாமா? வேண்டுமானால் எந்தத் தினத்தில் கொண்டாடவேண்டும்? என்பன பற்றித் தங்களின் திருத்தமான பதிலை உலக மக்களின் சார்பாய் எதிர்பார்க்கின்றேன்.

சிவசூரிய நாராயணபிள்ளை
பஞ்சாங்ககணிதர்

இட்டமொழி
திருநெல்வேலி,
தென்னிந்தியா.

●

### "ஓர் ஐயம்!"

இப்பகுதியில் புதிதாய் வந்த ஓர் யாழ்ப்பாண நண்பர் தாம் சூரிய குலத்து வேளாளன் என்றும் மற்றும் வேளாளர் எனப்படுவோர் சூரிய குல வேளாளரில் குறைந்தவரென்றும் கூறினர். இவரது கூற்று இவ்விடமுள்ள மற்றையோர்களிடத்து ஓர் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. "இரவிகுலம்" எனும் சொல்லை இலக்கியத்திற் கண்டோமே யன்றி யாழ்ப்பாணப் பகுதியில் இன்னும் இருக்கிறதேயென அறியவில்லையென ஒரு சிலரும் வேறுசிலர் அவ்விதம் இருந்தால் இலக்கிய ஆசிரியர்கள் அதனை எடுத்துக் காட்டப் பின்னிற்கமாட்டார்களே எனவும் பேசிக்கொண்டனர்.

இச்சந்தேகத்தைத் தங்கள் பத்திரிகை வாயிலாகவே நிவிர்த்தியாக்க விரும்புகின்றேன். யாழ்ப்பாணப் பகுதியிற் சூரிய குலமென்றோர் குலமிருக்கிறதா? அக்குலமிருப்பின் யாழ்ப்பாணத்தில் எவ்வெவ்வூர்களில் உண்டென்பதை அறியத் தருவீர்களாக.

இப்படிக்கு
பொதுநலம் விரும்பி

[ இத்தகைய குலக்கலப் பேச்சு, இத்தகைய குலவே ஆராய்ச்சியும் இக்காலத்தில் இங்கே இல்லை. ] ப—ர்.

## மதுவிலக்கு ஆலோசனைக் கூட்டம்

நிகழும் கர வருஷ மாசி மீ 25-ந் திகதி (8-3-52) சனிக்கிழமை மாலை 5 மணியளவில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் யாழ்ப்பாணத்தில் மதுவிலக்கு இயக்கத்தைத் தொடங்குவதைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு பொதுக் கூட்டம் Dr. க. குருசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## செய்தித் திரட்டு

=O=

சுகாதார முன்னேற்றத்துக்கும் க்ஷயரோக நீக்கத்துக்கும் செலவழிக்கும் பொருட்டு ரூபா 3,180,000 அகில உலக நிலையங்களால் இலங்கைக்குக் கொடுக்கப்படுமென்று அறியவருகின்றது.

x x x

தென்கிழக்காசிய நாடுகளெல்லாம் தளர்வற்ற வாழ்க்கை நிலையுடையனவாயிருக்க, இலங்கையொன்றே சுவர்க்கமாகத் துலங்குகின்றதென்கிறார் சர்வதேசப் பிரதிநிதி, சாவகச்சேரியில் நடந்த பிரசைக் கூட்டமொன்றில், கொழும்புப் பொருட்காட்சியைத்தான் அவர் குறிப்பிடுகின்றார். இன்றேல் இலங்கையின் பிறபாகங்களை அவர் அறியார் போலும்? காட்சியின் தன்மை கண்ணாடியைப் பொறுத்ததே!

x x x

காஷ்மீரப் பிணக்கை நீக்கிச் சமாதான ஆக்கத்துறைக்கும் பொருட்டு Dr. பிராங்கிரஹாம் அவர்கள் புது டெல்லிக்குத் திரும்பவும் வந்திருக்கிறார்.

## உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 9—3—52——15—3—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

சொந்தத் தொடர்பில் நன்மையான வாரம். எடுக்கும் முயற்சிகள் நன்மையாக வேண்டும் வார இறுதிக்கு முன் சில பிரயோசனமான தொடர்புகள் உண்டாகும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வியாபாரத்துக்கு நல்ல வாரம். குடும்ப நிலைபரம் வீட்டு நிலைபரங்கள் மிக நல்லாயிருக்கும் நடந்த முறையில் நடப்பது நன்மையைச் சில காலத்துக்குத் தருமாதலின் மாற்றமொன்றுஞ் செய்ய முயல வேண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

தனவரவுக்கு நல்ல வாரம். குடும்பச் சண்டைகள் குறையும். பெண்ணினச் சினேகிதரால் நன்மையுண்டு. பகைவரழிவுக்கிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

உதவியாயிருக்கக்கூடிய ஒருவருடன் பிழையாய் நடக்கக்கூடிய அபாயத்துக்கிடமுண்டு. தனிநிலை நன்று. புதுத்திட்டங்களில் பணம் விடுவதைத் தவிர்க்கவும்

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.

விருவிருப்புக்கும் பிழை வினைகள் பணச்செலவை உண்டாக்கக் கூடும். தேவையில்லாத மானபங்கத்துக்கு இடமுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம் ஆனால் மனச் சமாதானமிராது. குடும்பச் சாருடலில் பிழை விளக்கத்துக்கிடமுண்டு. சுகதோரில் தொந்தரவுகளைத் தவிர்க்கவும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

சொந்த விஷயத்திற் கஷ்டகாலம். குடும்பத்தில் சண்டைகள் மன வேறுபாடுகளைப்பற்றிக் கவனமாயிருக்கலம். செலவதிகரிக்கும். வார இறுதி சில சந்தோஷமான புதினங்களைத்தரும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

சிறு தேகசுகவீனத் தொந்தரவுகளைத் தவிர இந்த வாரம் மிக நலமாயிருக்கும். வழக்கில் வெற்றியும் பகைவரழிவும் நிச்சயம். ஒரு பழைய சினேகிதன் பழையபடி வாழ்க்கையில் தொடர்புறுவார். வார இறுதிக்கு முன் விசேஷ கருமங்களை நிறைவேற்றும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

வாரத்தின் முதல் நாள் முழுமையும் நன்மையல்ல இந்த வாரம் திட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாய்ச் செய்யப்படும். ஆனால் தேவையான உதவி பெறுவதற்குப் பொறுத்திருக்க வேண்டும். நடுவாரத்தின் பின் பண நெருக்கடி குறையும்.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்த வாரம் பண நிலைமை சிறிது திருத்தம் ஆனால் நிக்கட் செவ்வாய் மனச் சமாதானமிராது. வார இறுதியில் நெருங்கியவர்கள் அன்பர்களிலிருந்து சில கண்டனங்கள் நேரே வரக்கூடும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு முற்பகுதி அரை வாரம் நன்று. போட்டியிலெவரை வெல்லுதலும் புகழும் நிச்சயம். புதன் பிற்பகல், வியாழன், வெள்ளி காலை கவனமாய்க் கழிக்க வேண்டும். வார இறுதி திரும்பவும் நன்று.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

விசேஷ கடிதப்போக்கு வரத்துக்களுக்கும் இன்பமான மாற்றங்களுக்கும் இடமுள்ள வாரம். சித்தியெய்துதற்குப் பெரும் முயற்சி செய்ய வேண்டும். வார இறுதி இரண்டு நாட்களும் கவனமாய்க் கழிக்கவும். சிறு இடையூறுகளுக்கிடமுண்டு.

## கால்நடைகளைக் காப்பாற்றுவிட்டால் கடும் பஞ்சம் நேரிடும்!

1-ம் பக்கத் தொடர்ச்சி

யாமல் பட்டினிகிடந்து சுகாதாரமில்லாமல் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்படுகின்றார்கள். ஆகையால் கால்நடைகளை உணவுக்காக வெளியேற்றுவதும் கொலைசெய்வதுமாய அபிப்பிராயத்தை இனிமேலாவது கண்டிப்பாகத் தடுக்க வேண்டும். கால்நடைகளின் இறைச்சியினால் சீவிப்பவர்களிலும்பார்க்கக் கால்நடைகளைப் பாதுகாத்து அவற்றின் உதவியால் சீவிப்பவர்களின் தொகை இந்த நாட்டில் பன்மடங்கு அதிகமாகும்"

### அரசாங்கம் அசைகிறதில்லை!

வடமாகாணப்பகுதிகளில் இருந்து இறைச்சிக்காகக் கால்நடைகளை வெளியேற்றுவதைத் தடுக்கும்பொருட்டு சென்ற 4-11-51ல் நடைபெற்ற அகில இலங்கைக் காந்திய சேவாசங்க நிர்வாகசபையில் ஒரு தீர்மானம் நிறைவேறறப்பட்டது. அத்தீர்மானம் அரசாங்கத்தாருக்கு அனுப்பப்பட்டும் அதன் சார்பாக எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை எனத் தெரிகிறது. இப்பொழுது கால்நடைகளை இறைச்சிக்காக அப்புறப்படுத்தும் முயற்சி வடமாகாணப்பகுதிகளில் அதிகரித்திருப்பதாலும் காந்திய சேவாசங்கத்துக்கு வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் இருந்து இந்த அக்கிரமத்தைத் தடுப்பதற்குரிய முயற்சிகளைக் கையாளுமாறு கடிதங்களும் உருக்கமான முறைப்பாடுகளும் வந்துகொண்டிருப்பதாலும் அகில இலங்கைக் காந்திய சேவாசங்கம் வருகிற 9-3-52 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் "கால்நடைகள் பாதுகாப்பு ஆலோசனை மகாநாடு" ஒன்றைக் கூட்டுகின்றது.

குறித்த கால்நடைகள் பாதுகாப்பு ஆலோசனை மகாநாட்டுக்கு வடமாகாண அரசாங்க அதிபர் (Govt. Agent) உதவி அரசாங்க அதிபர் வடபகுதி மச்சியதொழில் அதிகாரி, வித்தியாதிகாரி, உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, உதவி ஸ்தலஸ்தாபன அதிகாரி, யாழ்ப்பாண நகரசபைத் தலைவர், யாழ்ப்பாண நகரசபைக் காரியாதிகாரி, கிராமச்சங்கங்களில் தலைவர்கள், காரியாதிகாரிகள்(D R O) பாராளுமன்ற அங்கத்தவர்கள்கல்லூரிகளின் அதிபர்கள் செனேற்றர்கள், கூட்டுறவுப்பகுதி அதிகாரிகள்பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆகியோர் அழைக்கப்படுகின்றார்கள். இவர்களையும் மேலும் வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவுப் பகுதி ஸ்தாபனங்கள் சனசமூக நிலையங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஏனைய பொதுநிலையங்கள் எல்லாம் தங்கள் பிரதிநிதிகளை அனுப்புமாறும் வேண்டப்படுகின்றன. இந்த அருமையான முயற்சியில் கவனம், அனுதாபம் — சிரத்தை உள்ள எல்லா அன்பர்களும் சமூகமளித்து வேண்டிய ஆலோசனைகளைச்சமர்ப்பித்துக் காரியங்களுக்கு உயிர்ப்பிச்சை அளிப்பார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை உணர்ச்சியை உண்டுபண்ணுவது யார்கடமை?

1-ம் பக்கத்தொடர்ச்சி

குடும்பங்களுள்ளே யுள்ள ஒற்றுமையே நிலை குலைகின்றது. ஒழுக்கமென்பது ஒரு சிறிதுமின்றி ஒழிகின்றது. சாராயப்போத்தல் இரண்டுக்குமேல் ஒருவர் வைத்திருக்கக்கூடாது என்பது சட்டம். ஆனால், தேர்தற் காலத்திலே சாராயப் போத்தல்கள் பெட்டி பெட்டியாய் வந்திறங்கி வெறிகொண்டு உருண்டு புரண்டு திரிவதை அறியாதார் யார்? வாக்காளரை உபசரித்தலே சட்ட விரோதம். உபசாரமா? பேருபசாரம் நடப்பதை யறியாதார் யார்? பைகளெல்லாம் அவிழ்க்கப்பட்டு வீடுவீடாய்ப் பணம் போவதை அறியாதார் யார். ஒருவருடைய வாகனத்தி லேறிப்போய் மற்றவருக்கு வாக்களிப்பதை யறியாதார் யார்? இந்த அயோக்கியங்களுக்கெல்லாம், இந்த அதர்மங்களுக் கெல்லாம், இந்த முரண்பாடுகளுக் கெல்லாம் எங்கள் பிரதிநிதிகள் காரணராகவிருக்கிறார்களென்பதை அறியாதாரொருவர் இருக்கினறாரா? இவற்றில் ஒன்றுக்காயினும் தாம் காரணரல்லர் என்று எங்கள் பிரதிநிதிகளுள் யாராயினும் ஒருவர் சத்தியவாக்காகக் கூறமுடியுமா?

இவ்வாறு அன்பு ஒற்றுமை, ஒழுக்கம் ஆகியவற்றின் ஒழிவுக்குக் காரணராகிய பிரதிநிதிகளுள்ளும் பாராளுமன்றப் பிரதிநிதிகளே அவற்றின் ஆக்கத்துக்கும் காரணராதல்வேண்டும். அவ்வித ஆக்க முயற்சிக்குப் பிரதிநிதிகள் தங்களுள்ளே ஒற்றுமைப் படுதல் இன்றியமையாதது. ஒற்றுமையின்மைக்கு அன்பின்மையே காரணம். அன்பே சிவம். அஃதே இன்பந்தருவது என்பது சைவவாழ்க்கையின் அத்திவாரம். உன்னைப் போல உன் அயலவனை நேசிப்பாயாக என்பது கிறிஸ்துநாதர் உபதேசம். சகோதரத்துவ மனப்பான்மையே முஸ்லிம்களின் மதவாழ்க்கையை வழிநடத்திச் செல்வது. இவை எங்கள் வாழ்க்கையைச் சீரியதாக்கி இன்பந்தரும் தன்மையனவென்று எங்கள் பிரதிநிதிகள் விளங்குகிறார்களானால், நம்புகிறார்களானால் இன்னே தங்கள் வித்தியாசங்களை ஒழித்துத் தங்களுக்குள்ளே ஒற்றுமையை நிலவச் செய்யுமாறு உழைக்க வேண்டும். இதுவே உண்மைத் தொண்டுக்கு அடிகோலுவதாகும்.

ஒன்றுபட்டா லுண்டு
　வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்குந்
　தாழ்வே
நன்றிது தேர்ந்திடல்
　வேண்டும் — இந்த
ஞானம்வந்தாற் பின்
　நமக்கெது வேண்டும்.

என்னும் பாரதியாரின் பாத்தரும் பொருளை உளத்திருத்தி எங்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகள் போட்டி மனப்பான்மையை அறவே நீக்கி ஒற்றுமை மனப்பான்மையை ஆக்க உடனே முயலவேண்டும்!

…. …. …. …. …. …. …. …. …. …. ….

## அரசியல் அலை

முதலாம்பக்கத் தொடர்ச்சி

கடிதங் காத்திருப்பதை மந்திரி ஒரு அவசியம் போசனத்திற்குப்பின் வைத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தநிலைமை ஏற்பட்டிருக்கிறது!

சாடிக்கு வாய்த்த மூடிபோலப் புகையிரதமும் தோவிதானத்தை அவதானிப்பதில் மிகவும் நேர்மையுள்ளதாகவே காணப்படுகின்றது. கொழும்பு-யாழ்ப்பாணப் புகையிரதம மாதத்தில் இரண்டொருமுறை காலையிற் குறிக்கப்பெற்ற நேரத்தில் யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் வந்து சேர்ந்துவிடுகிறதே வடபகுதியார் செய்த தவப்பயனாகும்!

புகையிரதம் கடிதங்களை நேரத்திற்குக் கொணர்ந்து சேர்க்கும் என்று நம்பமுடியாமலிருக்கும் அரசாங்கம் ஒரு 'மோட்டார் இரதக்' கடிதப் போக்குவரத்தை ஒழுங்குசெய்யலாமே!

'அவசரக் கடிதம்' என்று அனுப்பினும் என்ன பயன்? புகையிரதம் வந்து சேரவல்லவா வேண்டும்! புகையிரதம் வந்துவிட்டாற் போதுமா? ....! கடிதங்கள் கட்டவிழ்க்கப்பட்டு அனுப்பப்பட ஒரு பொழுது போய்விடும்!

---

## திருக்கேதீஸ்வர வித்தியாசாலை

---

### கவியாட்ட விழாவும் பரிசளிப்பு விழாவும்

திருக்கேதீஸ்வர வித்தியாசாலையில் டை விழா 24-2-52 ஞாயிற்றுக் கிழமை பகல் பதினொரு மணியளவில் ஆரம்பமாயது. அத்தருணம் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சிவராத்திரிக் கொண்டாட்டத்துக்காக திருக்கேதீஸ்வரத்திற்கு வந்திருந்த பல பெரியாரும் சமூகங்கொடுத்து விழாவைச் சிறப்பித்தனர்.

பாடசாலைப பிள்ளைகளின் தேவார பாராயணத்தோடு விழா ஆரம்பமாயது. மாணவர்கள் சங்கீதம், பாட்டு, நடனம், கும்மி, குறத்தியாட்டம், சம்பாஷணை முதலிய விஷயங்களைப் படித்தும், பாடியும், நடித்தும், ஆடியும், காண்பித்தனர். சபையோர் இவற்றையெல்லாம் கண்டு களித்தனர்.

பின்னர் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையார் சிலரின உபயமென டை சபைக்காரியதரிசி திரு. S. சிவசுப்பிரமணியம் அவர்கள் அனுப்பிய புத்தகங்களும் படங்களும் இனிப்பு வகைகளும் பாடசாலையின எல்லாப் பிள்ளைகளுக்கும் மாக்கை காரியாதிகாரியின் மனைவி ஸ்ரீ மதி V. கந்தப்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டன. ஆசிரியர் திரு. கு. சிதம்பரப்பிள்ளை அவர்களால் அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்ட பின்னர் தலைமை ஆசிரியர் திரு. ச. வேம்பு அவர்களின் குறிப்புரையுடனும் நன்றி உரையுடனும் இரண்டு மணியளவில் விழா நிறைவெய்தியது.

---

பாணந்துறைப் பகுதியிலுள்ள தந்திரிமுல்லைக் கிராம முன்னேற்றச் சங்கத்தார் 15-3-52 ல் பத்தினி தேவிக்குப் பூசனைபுரிந்து கிராம முன்னேற்றத்துக்கருள் புரியுமாறு வேண்டத் தீர்மானித் திருக்கின்றனர்.


## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க வேற்பிள்ளையவர்கள செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரதமான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுணபொருளவிளக்க விரிவுரை, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில நடக்கும் தமிழ்ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ. ) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள்சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை 1. (கோபாலநேசரத்தினம்) டை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச.

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1·00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அஞ 10)

புலியூர் (யமக) அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது, ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply :. to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, auJaff,



## சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜ்சிரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிசமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.



இலங்கையின் மிகப்பெரிய
══ நகை ══
வியாபாரிகள்
= O =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிருப்பர்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday, March 7, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org